# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

# தூது

## நற்செய்தி துணுக்குகள்

**செப்டம்பர் - 2024 (மடல் - 24) செய்தி - 8**

***"கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார், கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்."***
***சங்கீதம் 29:11***

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 9 |
| வேத வினாக்கள் | 21 |
| கோதுமை மணி | 24 |
| துணுக்குகள் | 26 |
| ஆலய பக்கம் | 28 |

**நன்மை செய்யவும், பகிர்ந்து வாழவும் மறவாதிருங்கள். இவ்வகை பலிகளே கடவுளுக்கு உகந்தது. (எபிரெயர் 13:16 புதிய மொழிபெயர்ப்பு)**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் ஆண்டவர் நமக்கும், நமது குடும்பத்திற்கும் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். புதிய மாதத்துக்குள் வந்திருக்கிறோம். சிறப்பாக விடுமுறை நாட்களை மகிழ்சியேடு கொண்டாடவும் உறவுகளோடும், சொந்தங்களோடும் உறவாடி மகிழவும், பயணங்களில் பாதுகாப்பையும் அருளிச்செய்தக் கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கு ஆசீர்வாதமான காலங்களாக அமைய ஆண்டவர் அருள் செய்வாராக. பல வேளைகளில் எது தேவை, எது ஆசை என்று புரிந்துகொள்ள முடியாமல் மனிதன் தவிக்கின்றான். தேவைக்கும், ஆசைக்கும் இடையே இருந்து மனிதன் போராடிக் கொண்டிருக்கிறான். சிலவேளைகளில் ஆசை அளவுக்கு அதிகமாகி, அது பேராசையாக மாறிவிடுகிறது. போதும் என்கின்ற மனநிலை இல்லை என்பதினால் தன்னிடம் இருப்பதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள மனம் மறுக்கிறது. ஆனால் திருமறை பகிர்ந்து வாழும் சமுதாயத்தையே விரும்புகிறது. எளிய மக்களோடு நமக்குரியதைப் பகிர்ந்து வாழ விரும்பும் சூழலில், இறைவன் எப்படிப்பட்டப் பகிர்வை நம்மிடம் எதிர்பார்க்கிறார் என்பதைத் திருமறையின் வெளிச்சத்ததில் தியானிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

**1. பகிர்ந்தளிக்கிற கர்த்தர்:**

இறைவன், மனிதன் உயிர்வாழ்வதற்கு வேண்டிய அனைத்தையும் படைத்து, அவைகள் அனைத்தையும் மனித சமுதாயத்திற்குப் பகிர்ந்து கொடுக்கிறார். படைப்புகள் அனைத்தும் ஆண்டவருக்குச் சொந்தமானவைகள்(சங். 24:1). தமக்குரியதை ஆண்டவர் நம்மோடு பகிர்ந்துகொள்கிறார். எல்லா மக்களும் பயன்பெற வேண்டும் என்பதற்காகத் தாராளமாகவும் கொடுத்திருக்கிறார். வனாந்தரத்தில் பயணித்த இஸ்ரவேல் மக்களுக்கு உணவாகிய மன்னாவை அனைவருக்கும் பகிர்ந்துகொடுக்கிறார். அதே வேளையில் தாராளமாகவும் கொடுக்கிறார். தங்கள் தேவைக்குத் தக்கதாக எவ்வளவு வேண்டும் என்றாலும் எடுத்துக்கொள்ளலாம் (யாத் 16:16-18). கடவுளிடமிருந்து பெற்றதை மனிதனும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டுமென்று, யூபிலி வருடத்தையும் நியமிக்கிறார். ஒவ்வொரு 50ஆவது ஆண்டும், ஒவ்வொருவனும் பிறரிடமிருந்து நிலத்தையோ, பொருளையோ பெற்றிருந்தால். அதைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்(லேவி 25:8-19). ஒவ்வொரு யூபிலி ஆண்டிலும் ஒரு சமத்துவ சமநிலை சமுதாயத்தை உருவாக்குவதற்கான கடவுளின் திட்டமாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் பகிர்விலே மிக மிக முக்கியமானது, தமது ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நம்மோடு பகிர்ந்து கொண்டது. இது மனித சமுதாயத்தின் மீது இறை வைத்திருக்கின்ற அன்பை விளக்கப்பண்ணுகிறது(யோவான். 3:16).

**2. கிறிஸ்துவின் போதனையிலும் வாழ்விலும் பகிர்வு:**

இயேசு கிறிஸ்துவின் பூலோக ஊழியப்பாதையில் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்ட மனிதனுக்கு இயேசு சொல்கிறார்: "நீ போய் உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு"(மாற்கு 10:21). கொஞ்சம் பிச்சை போட்டுவிடு என்று அல்ல, அனைத்தையும் பகிர்ந்து கொடுக்கச் சொல்கிறார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவன் என்பதினால் பகிர்ந்து கொடுக்க மனிமில்லாமல் துக்கத்துடனே சென்றுவிட்டான். இயேசுவிடம் வந்து துக்கத்துடன் சென்ற ஒரே மனிதன் இவன்தான். அதே வேளையில் இயேசுவைச் சந்தித்த சகேயு, ஆண்டவரே என் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன் என்கிறான் (லூக்கா19:8). இங்கு இரட்சிப்புப் பெற்றதற்கு அடையாளமாக பகிர்வு இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இயேசு கிறிஸ்து நம்மை மீட்பதற்காகத் தம்மையே பகிர்ந்தளிக்கிறா (பிலி 2:6-8).

**3. ஆதி திருச்சபையின் பகிர்வு:**

ஆதி திருச்சபை கிறிஸ்தவர்களின் ஒருமைப்பாட்டு வாழ்வின் அடையாளமாக அவர்களின் பகிர்வு இருக்கிறது. காணியாட்சிகளையும், ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனின் தேவைக்குத் தக்கதாக அவைகள் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள் (அப்போ 2:45). ஒருவனாகிலும் தனக்குரியவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை? ஒரு குழந்தை பிறந்த உடன் அது கற்றுக்கொள்ளும் வார்த்தைகளில் ஒன்று என்னுடையது. ஆனால் ஆதி கிறிஸ்தவர்கள் மறந்து போன வார்த்தை என்னுடையது என்பதாகும். அவர்களுக்குரியதை நமக்குரியது என்று பொதுவாக வைத்து அனுபவித்தார்கள். பவுலடியார் மக்கெதோனியா நாட்டுத் திருச்சபையின் பகிர்வைப்பற்றி எழுதும் பொழுது, கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய் கொடுத்தார்கள். என்கிறார் (2கொரி 8:25). நம்மைசுற்றி ஏராளமான எளியமக்கள் இருக்கிறார்கள். இறைவன் எதிர்பார்க்கும் பகிர்வை நிறைவேற்றி, கிறிஸ்துவின் அன்பை இவ்வுலகுக்குக் காட்டுவோம். இறையரசில் ஆண்டவர் எவ்வளவு சேர்த்தாய் என்று அல்ல, எவ்வளவு ஏழைகளோடு பகிர்ந்து கொண்டாய் என்றே கேட்பார். நமக்குரியதை எளிய மக்களோடுப் பகிர்ந்துகொள்வோம் என்கின்ற மனநிறைவோடு வாழ்வோம்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
Rev. Dr. A. Samuel

**"கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார், கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்."**
**சங்கீதம் 29:11**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாகப் பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நமது குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

சங்கீத நூல்களிலுள்ள மிகப் பழமையான சங்கீதங்களில் ஒன்று 29ஆம் சங்கீதம். ஆண்டவர் தமது மகிமையின் பிரசன்னத்தை இயற்கையின் வழியாக எப்படி வெளிக்காட்டுகிறார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அதோடு ஆண்டவர் கேதுரு மரத்தை முறிக்கும் புயல் காற்றைவிட வலிமை மிக்கவர். லீபனோன் குன்று கர்த்தரின் ஆற்றலுக்கு முன்பாக சிதறுகிறாது. கடவுளின் மகிமையின் பிரசன்னம் காதேஸ் வனாந்திரத்தையே அதிரச் செய்கிறது. இவ்வளவு ஆற்றலும் வலிமையும் கொண்ட ஆண்டவர் தம்முடைய மக்களுக்கு என்ன செய்கிறார்?

**1. ஆண்டவர் தம் மக்களுக்குப் பெலன் கொடுக்கிறார்:**

பெலன் (or) வலிமை எல்லோரும் எதிர்பார்க்கின்ற ஒன்று. ஏனெனில் அதன் வழியாக மற்றவர்களுடைய கவனத்தை நம் வசமாகத் திருப்ப இயலும் என்று நினைக்கிறோம். ஆனால், நம்மை மீட்கும் வலிமை நமக்கு இல்லை. மாபெரும் படை, அரசனுக்கு வெற்றியை கொண்டு வருவதுதில்லை (சங்கீதம் 33:16,17). நமது சுய பெலத்தினாலோ, பண பெலத்தினாலோ வெற்றியை பெற இயலாது. வுலிமை மிக்க இயற்கையை, சாதாரண மனிதர்களாகிய நாம் வெற்றிக் கொள்ள வேண்டும் என்றால், வலிமை மிக்க ஆண்டவரை நமது பக்கமாகவும், பெலனாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை (சங்கீதம் 16:8). ஆண்டவர் தம் மக்களுக்கு இந்த பெலத்தை பரிசாகக் கொடுக்கிறார். ஆண்டவரிடத்தில் அன்புக் கூறுகின்றவர்களுக்கு ஆண்டவர் பெலனை அல்லது ஆற்றலை கொடுக்கிறார் (சங்கீதம் 18:1,2). ஆண்டவரால் மட்டுமே நம்மை வலிமையுள்ளவர்களாக மாற்றப்படுகிறோம் என்பதை, தெளிவாக உணர்த்தவே ஆண்டவர் சாதாரண மக்களை தெரிந்தெடுக்கிறார். மோசே, கிதியோன் தாவீது போன்ற சாதாரண மனிதர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்குத் தமது ஆற்றலையும் பெலத்தையும் பரிசாக கொடுக்கிறார். எனவே பெலம் நிறைந்த உலகத்தை நாம் வெற்றி கொள்வதற்கு ஆண்டவர் நம்மை பெலப்படுத்துகிறார்.

**2. ஆண்டவர் தம் மக்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கிறார்:**


ஆற்றல் மட்டுமல்ல சமாதானமும் ஆண்டவர் கொடுக்கிற பரிசு. சமாதானம் என்பது முழுமையான நலமும், முழுமையான பாதுகாப்பையும் கொண்டது. இந்த அமைதி, நமது தனி வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும், கிடைக்க வேண்டும். இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கை வரலாறு மிகவும் கடினமான, கரடு முரடானவை. எப்பொழுதும் போரும், பிரச்சனைகளையுமே சந்தித்துக் கொண்டிருந்தார்கள். இன்றுவரை அவர்கள் பிரச்சனைகளின் மத்தியிலே வாழ்கிறார்கள். இப்படி பிரச்சனையில் வாழ்கிற இஸ்ரவேல் மக்களுக்கு சமாதானம் மிக மிக அவசியமானது. இந்த சமாதானம் ன்கின்ற முழுமையான நலனையும், பாதுகாப்பையும் ஆண்டவர் கொடுக்கிறார். எனவேதான் பவுல் தன் கடிதத்தை தொடங்கும் பொழுதும், நிறைவு செய்யும் பொழுதும் சமாதானத்தின் தேவன் உங்களோடு இருப்பாராக என்கிறார். பிரச்சனைகள் நிறைந்த இந்த உலகத்தில் ஆண்டவர் தம்முடைய ஜனத்திற்கு சமாதானம் அருளிச் செய்கிறார். அவர் மீது அன்பு காட்டுகிற அனைவருக்கும் இதை இலவசமாகவே கொடுக்கிறார்.

**3. ஆண்டவர் தம் மக்களை ஆசீர்வதிக்கிறார்:**

ஆற்றலும், சமாதானமும், ஆசீர்வாதமும் ஆண்டவர் மட்டுமே கொடுக்கின்ற பரிசு வேறு யாராலும் அதை அளிக்க இயலாது. நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது (யாக்கோபு 1:17). ஆசீர் என்பதற்கு பெரக்கா என்று பெயர், இதற்கு கொடை (or) பரிசு என்று பொருள். பொதுவாக இது செழிப்பையே குறித்தாலும், இது இறைவனிடமிருந்து கிடைக்கின்ற ஒன்றையே சுட்டிக்காட்டுகிறது. ஏனெனில், ஆண்டவரால் மட்டுமே ஆசீர்வதிக்க இயலும். மக்கள் தங்களுக்குப் பெயர் உண்டாக ஒரு மிகப் பிரம்மாண்டமான பாபிலோன் கோபுரத்தைக் கட்டினார்கள். ஆனால் அது அவர்களுக்கு ஆசிர்வாதமாக அமையவில்லை. அவர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். ஆனால் ஆண்டவர் ஆபிரகாமை அழைத்து அவரை ஆசீர்வதிக்கிறார். நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் என்கிறார். (ஆதியாகமம் 12:2). ஒரு மனிதனின் பெயரை பெருமைப்படுத்துவதோ, ஆசீர்வதிப்பதோ ஆண்டவரின் கரத்திலே இருக்கிறது. அவரால் மட்டுமே ஒருவனை உயர்த்தவும், தாழ்த்தவும் இயலும். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். புதிய மாதத்திற்குள் நாம் வந்திருக்கிறோம், வலிமைமிக்க இவ்வுலகை வெற்றி கொள்வதற்கான ஆற்றலையும் வலிமையும் ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கிறார். போராட்டம் நிறைந்த உலகத்தில் ஆண்டவரே நமக்கு அமைதியும் சமாதானத்தையும் அருளிச்செய்கிறார். ஆண்டவரே நம் பெயரை பெருமைப்படுத்த இயலும். இந்த வாக்குறுதியை நாம் பெற்றுக் கொள்வதற்கு ஆண்டவரிடத்தில் நாம் அன்பு கூறுவேண்டும். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

மீட்பரின் பணியில்
**திருமதி.ஜெபா சாமுவேல்**

## கிறிஸ்தவனும் எளியோரும்



**"ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள்" [சங்கீதம் 82:3].**

இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த போது, திக்கற்றோரின் தேவையை சந்திக்கிறவராக வாழ்ந்தார். அவர் வைத்துச் சென்ற மாதிரியை பின்பற்ற வேண்டியது நம் கடமை. வேதாகமத்தில் அநேகர் ஏழைகளின் மீதும், தேவையுடன் இருப்போரிடமும் அக்கறை உள்ளவர்களாக இருந்தனர். அவர்களில் சிலரைக் குறித்து சிந்தித்து, அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய காரியம் என்னவென்று பார்ப்போம்.



**தொற்காள் :** யோப்பா பட்டணத்தில் கிரேக்குப் பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள் [அப்.9:36]. சீஷியாக இருந்த தொற்காள் தருமங்களை மிகுதியாய் செய்து வந்தாள் என்று வாசிக்கிறோம். அவள் மரித்தபோது விதவைகள் அழுதார்கள் என்று வேதம் கூறுகிறது. தன்னுடைய தாலந்து, நேரம், செல்வம் ஆகியவற்றை தேவையுள்ள மக்களுக்கு செலவு செய்திருந்தாள் தொற்காள்.

- ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய நேரம், தாலந்து, படிப்பு, திறமை ஆகியவற்றை பிறருக்காகவும் செலவிட வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

**மக்கெதோனியா சபையார்:** இவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள் [2 கொரி.8:2]. தர்ம காரியத்தை செய்வதற்கு தங்கள் திராணிக்கு மிஞ்சியும், மனதாரக் கொடுத்து உதவினார்கள்.

- வசதி இருந்தாலும் இல்லாவிட்டாலும், தேவையில் உள்ளோருக்கு உதவி செய்வது கிறிஸ்தவனின் கடமையாய் உள்ளது.



**ரூத் :** தன் மாமியாரை விட்டு போக மறுக்கும் மறுமகளை ரூத் முதல் அதிகாரத்தில் பார்க்கிறோம். தன் சொந்த வீட்டுக்குச் சென்று தனக்கு மறுவாழ்வு அமைப்பதை யோசிக்காமல், விதவையாய் இருக்கும் தனது மாமியோடு சென்று அவருக்கு ஒத்தாசையாய் இருப்பதை ரூத் தெரிந்து கொண்டாள். இறுதியில் இயேசுவானவர் தன்னுடைய சந்ததியில் பிறக்கும் பாக்கியத்தைப் பெற்றாள் ரூத்.

- தன் குடும்பத்தில் உள்ள எளியோர், திக்கற்றோர், விதவைகளை கவனிக்க வேண்டிய பொறுப்பு ஒரு கிறிஸ்தவனுக்கு உண்டு.



**சாறிபாத் விதவை:** பஞ்சம் தோன்றிய காலத்தில் தேவனின் கட்டளைப்படி சாறிபாத் வருகிறார் எலியா (1ராஜா. 17:9). தானும் தன் மகனும் உள்ளதை சாப்பிட்டு ஜீவனை விடும்படி இருந்த விதவையிடம், எலியா தனக்கு ஒரு அடை முதலில் செய்து தரும்படி கூறுகிறார். முதலில் அப்பம் தர மறுத்த அந்த விதவை, பதினான்காம் வசனத்தில் வரும் நம்பிக்கையின் வார்த்தையைக் கேட்டதும், விசுவாசித்து கொடுத்து, பஞ்சத்தில் பிழைத்தாள். அதன் பின்னர், சாக்கொடுத்த தன் மகனையும் உயிரோடு பெற்றுக்கொண்டாள்.

- பிறருக்கு உதவ முடியாத திக்கற்றவனாய் இருந்தாலும், ஒரு கிறிஸ்தவன் தேவையோடிருக்கும், தேவ ஊழியக்காரனுக்கு உதவி செய்ய கடமை பட்டிருக்கிறான். அதனால் அவனுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம் அளவிட முடியாதது.



**சகேயு :** இயேசுவானவர் தன் வீட்டுக்கு வந்தபோது, சகேயுவின் பாவங்கள் அவனுக்கு உணர்த்தப்பட்டது. தன் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்கு கொடுக்கிறேன் என்று கூறுகிறான். அதோடு கூட தான் அநியாயமாய் வாங்கியதையும் நாலத்தனையாய் திரும்ப கொடுப்பதாக கூறுகிறான். உடனே இயேசு அவனை நோக்கி: “இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே” [லூக்கா 19:9] என்று கூறுகிறார். பாவியான சகேயு இரட்சிப்பை பெற்றுக்கொண்டான்.

- ஒரு கிறிஸ்தவன் எளியவனை கொள்ளையடிக்கக் கூடாது. தன் சம்பத்தை ஏழைகளுக்கு கொடுத்து உதவ வேண்டும்.

ஏழைகளின் கஷ்டத்தைக் கண்டும் காணாதவன் போலிருந்தால், இயேசுவை நம்மை காணாதவர் போல் இருப்பார். பின்னர் ஏழை லாசருவைக் கண்டும் உதவாத ஐசுவரியவான், அக்கினிக்கடலில் தள்ளப்பட்டதைப் போல நாமும் நித்திய ஜீவனை இழக்க நேரிடும். அத்தகைய கொடுமை நமக்கு நேரிடாதவாறு வசனத்திற்கு கீழ்ப்படிந்து ஏழை எளியோருக்கு உதவி செய்வோம். அப்போது “சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் **கர்த்தர்** அவனை விடுவிப்பார்” [சங்கீதம் 41:1] என்ற வசனத்தின்படி, கர்த்தர் நம்மை தீங்குக்கு விலக்கி காப்பார்.

**ஜெபசீலி ஆசீர்**

# வேதாகமப் பெண்கள்

**அன்புடன் கிரியை நடப்பித்த பெண் – தொற்காள்**
**[அப்போஸ்தலர் 9:36-42]**

மத்தியத்தரைக் கடலோரப் பகுதியிலுள்ள யோப்பா என்னும் துறைமுகப் பட்டிணத்தில் தொற்காள் (தபீத்தாள் – பெண்மான்) என்னும் பெயரையுடைய ஒரு பெண் வாழ்ந்து வந்தாள். இவள் தனக்கு அறிவிக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டு அவருக்கு தன் வாழ்வை அர்ப்பணித்து அவரின் அடியவளாய் வாழ்ந்து வந்தாள்.

**கிரியையுள்ள விசுவாசம்**

தொற்காள் தன் வாழ்நாளில் நற்கிரியைகளையும், தருமங்களையும், மிகுதியாய் செய்து வந்தாள். விதவைகளுக்கு அங்கிகளையும் வஸ்திரங்களையும் தைத்துக் கொடுத்தாள். அவளது விசுவாசம் கிரியைகளினால் நிறைந்திருந்தது.

தொற்காள் ஒரு நாள் நோய்வாய்ப்பட்டு மரித்துப் போனாள். உடனே அவள் சக விசுவாசிகள் லித்தா பட்டணத்தில் இருந்த பேதுருவிட்த்திற்கு இரண்டு சீஷர்களை அனுப்பி, அவரை அழைப்பித்தார்கள். அவர்கள் விசுவாசம் கிரியை செய்து. பேதுரு வந்த போது, அவர்கள் அவனை மேல் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகள் எல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடன் இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்தார்கள். தொற்காளின் அன்பின் செயல்கள் அவள் மரித்த பின்பும் பேசின. பேதுரு எல்லாரையும் வெளியே போகச் செய்து, முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணி, பிரேதத்தின் புறம்பாய் திரும்பி, "தபீத்தாளே எழுந்திரு" என்றான். உடனே அவள் உயிர் பெற்றாள். இது அப்போஸ்தலரால் செய்யப்பட்ட முதல் உயிர்த்தெழுதல். அவள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் செயலாக்கத்திற்கு ஒரு சாட்சியாய் மாறினாள்.

**சமுதாயப் பணியில் தன்னை ஈடுபடுத்தியவள் நற்கிரியைகளுக்கு சொந்தக்காரி**

தன் வாழ்நாள் முழுவதும் அநேக நற்கிரியைகளை செய்து வந்தாள். தான தர்மம் செய்தாள். தன்னால் இயன்றமட்டும் நற்கிரியைகளை செய்தாள். அதேபோல நாமும் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவோம். ஏழைகளுக்கும் திக்கற்ற பிள்ளைகளுக்கும் இரங்குவோம்.

**ஷர்மிளா ராஜேஷ்**

**அக்டோபர் மாத தலைப்பு**
**The Wisdom of the Elderly**
**மூத்தோரின் ஞானம்**

Dear Children,

The theme this September is "**CHRISTIAN RESPONSE TO POVERTY**".



There are so many poor people around us, living hand-to-mouth in slums and remote villages.

The Christian view of helping the poor is more than just giving people food or money.

The gospel renews people and gives them hope in a God who is Sovereign, loving, and good, and has power over disease and evil.

**WHY SHOULD WE CARE?** Because the Bible says so, and Jesus shows how…

The Bible says – "If anyone has material possessions and sees a brother or sister in need but has no pity on them, how can the love of God be in that person? Dear children, let us not love with words or speech but with actions and in truth. (1 John 3:17,18)"



**WHAT CAN YOU DO?**

- Pray for the Poor
- Give to the Poor
- Advocate for the Poor
- Educate the Poor

**OUR CHRISTIAN FAITH IS CENTRAL TO WHAT WE DO.**

We follow Jesus' example by being a visible, tangible expression of God's love as we serve alongside the poor and needy among us.

# MAJOR BIBLE EVENTS # 8 - CHRIST JESUS IS COME!



In fulfillment of prophecy, Jesus came to this earth and began his ministry at the age of 30 when he was baptized by John the Baptist (Luke 3:21–23).


Throughout his ministry, he lived out the purposes that God had given to him, which included proclaiming the **GOOD NEWS** to the poor, providing liberty to the captives, feeding the hungry and healing the sick.

Jesus loved the little children. He said – "Let the little children come to me, and do not hinder them, for the kingdom of heaven belongs to such as these. Matt. 19:14"

Jesus really did all of this during his lifetime and lived his whole life without sinning in any way. Jesus is really the Son of God; God in human form!

# CHILDREN IN THE BIBLE # 8 – THE BOY JESUS

Once when Jesus was 12 years old, while visiting the temple in Jerusalem, he got separated from his parents. After looking everywhere, Joseph and Mary realized that they must have left Jesus back at Jerusalem.




They finally found him in the temple courts. He was with the teachers of the Law, asking them questions. Everyone there was amazed at how much Jesus knew.


Luke records in his book - "And Jesus grew and became strong in spirit, filled with wisdom; and the grace of God was upon Him" (Luke 2:40).

**Daily Application** – Luke's record of Jesus' youth provides a blueprint for us today. From an early age, children can develop strength of character, learn and practice wisdom, and position him or herself to be blessed by God. May the Holy Spirit guide you daily, as you feed and grow on God's word.

# SAYING IT WITH PICTURES...




Follow God's example, therefore, as dearly loved children and walk in the way of love, just as Christ loved us and gave himself up for us as a fragrant offering and sacrifice to God.
Ephesians 5:1–2 NIV




Dear children, let us not love with words or speech but with actions and in truth.
– 1 John 3:18 NIV

# TINY TOTS SECTION

## COMPLETE AND COLOR IN...




SERVING THE NEEDY AROUND US


## Find It!

This group of friends helped collect school supplies for refugees who recently moved to their area.
Find the hidden objects.




## The Good Samaritan

LUKE 10:25-37



In the chapter of Luke, Jesus tells us to, "Love your neighbor as yourself" and gives us the story of the Good Samaritan as an example. Not only does the Samaritan bandage the stranger's wounds, he feeds and pays for the stranger's lodging until he is well again.

Help the Samaritan bring the man in need of help to the city.



## Spot 6 Differences in Jesus Fed the People





# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – JESUS' TEACHINGS AND MINISTRY.

1. At what age did Jesus start his ministry?

| | |
|---|---|
| a. 25 | b. 30 |
| c. 35 | d. 40 |

2. What was Jesus' first miracle?

| | |
|---|---|
| a. Feeding of the 5,000. | b. Changing water into wine |
| c. Miraculous haul of fishes. | d. Healing a blind man |

3. In the parable of the lost sheep, how many sheep were safe inside the fold?

| | |
|---|---|
| a. 100 | b. 99 |
| c. 50 | d. 49 |

4. Out of the ten lepers who Jesus healed, how many came back to say thank you?

| | |
|---|---|
| a. None | b. One. |
| c. Two. | d. Three. |

5. When a man asked, "Who is my neighbor?", what parable did Jesus reply with?

| | |
|---|---|
| a. The lost coin. | b. The lost sheep. |
| c. The good Samaritan. | d. The mustard seed. |

6. In the parable of the Good Samaritan, where was the traveler coming from?

| | |
|---|---|
| a. Jaffa | b. Jordan |
| c. Jericho | d. Jerusalem |

7. What happened to the traveler on the road?

| | |
|---|---|
| a. He was robbed and beaten. | b. He was lost for 40 days. |
| c. He was attacked by bears. | d. He got sick and died. |

8. Who was the first person to see the traveler?

| | |
|---|---|
| a. A Levite | b. A Samaritan |
| c. A Doctor | d. A Priest |

9. Who was the second person to see the traveler?

| | |
|---|---|
| a. A Levite | b. A Samaritan |
| c. A Doctor | d. A Priest |

10. Who finally helped the traveler?

| | |
|---|---|
| a. The Levite | b. The Samaritan |
| c. The Doctor | d. The Priest |

11. Where did the kind person take the traveler?

| | |
|---|---|
| a. A hotel | b. An inn |
| c. His home | d. a barn |

12. In the end, who truly acted as a neighbor to the traveler?

a. The Levite b. The Samaritan c. The Doctor d. The Priest

## WHAT ARE SOME WAYS YOU CAN SERVE THE NEEDY?

**Find It!**

Parrella's family served their neighbors who needed help. Can you find the hidden objects?



### CRYPTOGRAM

**Luke 10:27,28**

| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N | O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | | | | 3 | | | | 12 | | | | | | 22 | | | | | | 4 | | | | | |

_ O _ E   _ _ E   _ O _ _   _ O U _   _ O _
19 22 5 3   14 13 3   19 22 24 10   18 22 4 24   7 22 10

_ I _ _   A _ _   _ O U _   _ E A _ _ ,   _ I _ _
23 12 14 13   20 19 19   18 22 4 24   13 3 20 24 14   23 12 14 13


A _ _   _ O U _   _ O U _ ,   _ I _ _   A _ _
20 19 19   18 22 4 24   21 22 4 19   23 12 14 13   20 19 19

_ O U _   _ _ _ E _ _ _ _ ,   _ I _ _   A _ _
18 22 4 24   21 14 24 3 26 7 14 13   23 12 14 13   20 19 19


_ O U _   _ I _ _   A _ _   _ O _ E   _ O U _
18 22 4 24   16 12 26 10   20 26 10   19 22 5 3   18 22 4 24

_ E I _ _ _ _ O _   A _   _ O U _ _ E _ _ .
26 3 12 7 13 1 22 24   20 21   18 22 4 24 21 3 19 9

Jesus taught a parable (story) about a man who was wounded (hurt) by thieves. A couple of people saw the hurt man and passed by without helping him. Then a **good Samaritan** saw the hurt man and took care of him. Follow each person's path to the city to find out which one stopped to help.




KINDNESS KITS
By Maryssa Dennis
(Based on a true story)
The author lives in Utah, USA.
SOAP
SOAP
Church was great, wasn't it?
Now what should we do?
We could write letters to Grandpa or visit Sister Gomez. Or is there someone else we could help?
On the way to church, I saw people who looked like they didn't have homes.
Can we give something to them?
Good idea!
I'll find a list of donations the homeless shelter suggests. Let's see what we have at home.
GRANOLA BARS
Can we make some muffins to give to them too?
You bet.
A little while later . . .
Hi! We wanted to give you these.
They have lots of good stuff in them—even muffins!
Thank you!
God bless you.
I'm glad we helped people today.
Me too!




## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

1. The theme for the month of September is: ________________________________
   ______________________________________________.
2. What can you do for the Poor?
   a. ___________________________________________
   b. ___________________________________________
   c. ___________________________________________
   d. ___________________________________________
3. Throughout his ministry, Jesus lived out the purposes that God had given to him, which included ________________________________________________________
   ______________________________________________________________________
   ______________________________________________________________________
4. Which Parable of Jesus teaches about helping others? ______________________

Children may the Holy Spirit enable us to live as Jesus did – Helping the poor around us; and fulfilling the will of the Father in Heaven. Let us remember to pray each day for those in need.

God bless,
Mrs. Briliya Jeyaseelan.

# Answers to July/ August Children's Corner

## CHOOSE THE CORRECT OPTION – LIBERATED LIFE

1. b. Freedom from sin and its power
2. c. Faith in Jesus' sacrifice on the cross
3. b. Romans 6:22
4. d. Following Christ's teachings
5. d. Paul
6. a. Rainbow
7. c. Through Jesus Christ
8. c. An everlasting kingdom
9. a. Ten Commandments
10. a. Less than 20 years
11. c. 3 times
12. b. Jesus Christ

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below…

3. The theme for the month of July/ August is: **LIBERATED LIFE**.

4. GOD HAS FREED YOU FROM…
   a. **THE BONDAGE OF SIN**
   b. **THE PENALTY OF SIN (Death)**
   c. **THE DESIRES OF SELF**

3. GOD HAS FREED YOU TO…
   a. **OBEY JESUS**
   b. **LIVE LIFE IN CHRIST**
   c. **SERVE CHRIST IN WHAT WE DO**

5. List the persons who received a promise/ covenant from God in the Old Testament – **NOAH; ABRAHAM; MOSES; KING DAVID**

6. How did Daniel cope with living in a Foreign land? **PRAYING 3 TIMES A DAY**.

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

## MEMORY VERSE COMPETITION 2024

This year the Memory Verse Competition will be conducted during **usual Junior church Timings. Date: 06.09.2024**

**Beginners, Primary** and **Juniors** will need to **recite** their assigned memory verses, face to face, within the allocated time.

**Inters, Seniors** and **Super seniors** will need to come prepared to **write** the entire assigned portion from memory and submit it within the allocated time.

**Marking for Written Memory verse competition will be as follows**

- 1 mark will be awarded for every correct and completed verse.
- No marks will be deducted for punctuations.
- 0.1 mark will be deducted for each spelling mistake and missing grammar.
- 0.25 marks will be deducted for every missing keyword.
- 0.50 marks will be deducted for every 3 or more words missing (segment of a sentence)
- 1 mark will be deducted if there is no memory verse number, or if the order of the memory verses is interchanged. Partial verses will not be counted.
- Handwriting should be legible. No marks will be awarded, if the correcting teacher is unable to comprehend what is written.
- Final marks will be scored out of 10.

**MEMORY VERSE PORTIONS FOR 2024**

| SECTIONS | 2024 | | |
|---|---|---|---|
| | Portions | No. of Verses | Allocated Time |
| Beginners A (kg. 1) | Books of the Bible (NT) + Ps. 121 | 8 | 10 mins. |
| Beginners B (kg. 2) | Books of the Bible (NT) + Ps. 121 | 8 | 10 mins. |
| Primary A (Gr. 1) | Psalms 91 | 16 | 15 mins. |
| Primary B (Gr. 2) | Ps. 34 | 22 | 15 mins. |
| Primary C (Gr. 3} | Ps. 96; 97 | 25 | 15 mins. |
| Juniors A (Gr. 4) | Ps. 121 - 125 | 34 | 20 mins |
| Juniors B (Gr. 5; 6} | Psalms 119 (1 - 40) | 40 | 20 mins. |
| Intermediates (Gr. 7) | Ps. 50 - 52 | 51 | 1 hr. |
| Seniors (Gr. 8) | Ps. 100 - 103 | 63 | 1 hr. |
| Super Seniors (Gr. 9; 10; 11; 12) | Ps. 49 - 2 | 71 | 1 hr. |



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

1. ஒன்பது பட்டணங்கள் இருக்கிற இரண்டு கோத்திரங்கள் எவை?
2. ஒன்பது இரத்தினங்களின் பெயர்கள் அனைத்தும் வரும் ஒரு வசனம் எது?
3. ஒன்பது குணநலன்களைக் கொண்ட கனி எது?
4. ஒன்பது வசனங்களைக் கொண்ட ஒன்பது சங்கீதங்களை எழுதுக.
5. ஒன்பதாம் சேனாபதி யார்?
6. ஒன்பதாம் மணி நேரம் என்ன வேளை?
7. ஒன்பதாம் மணி நேரத்தில் நடந்த இரு நிகழ்வுகள் என்ன?
8. ஒன்பதாம் நாளில் காணிக்கை செலுத்தினவன் யார்?
9. ஒன்பதாம் மாதம் மறு பெயர் என்ன?
10. ஒன்பதாம் மாதத்திலே ராஜா எங்கு உட்கார்ந்திருந்தார்?
11. ஒன்பதாம் மாதம் இருபதாம் தேதி நடந்த நிகழ்வு என்ன?
12. ஒன்பது வருஷம் சமாரியாவிலே ராஜ்யபாரம் பண்ணின ராஜா யார்?
13. ஒன்பதாம் வருஷம் மட்டும் எதனைச் சாப்பிட வேண்டும்?
14. ஒன்பதாம் வருஷத்தில் பிடிபட்டது எது?
15. ஒன்பதாம் மணி நேரத்திலே தரிசனங்கண்டவன் யார்?

குறிப்பு : *அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், **25-ம் தேதிக்குள்** எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.*

# ஜுலை & ஆகஸ்டு மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

1. மிரியாம் (யாத். 15:20-22)
   மரியாள் (லூக் 1:46-55)
   எலிசபெத்து (லூக் 1:42-45)
   தெபோராள் (நியாயா 5:1-31)
   அன்னாள் (Iசாமு 2:1-10)
2. சங்கீதம் 104:35
3. மண்ணிலிருந்து ஆதாமின் பிறப்பு (ஆதி 2:7)
   எலும்பிலிருந்து ஏவாளின் பிறப்பு (ஆதி 2:22)
   கணவன் மனைவி சேர்ந்து பிள்ளைகளின் பிறப்பு (ஆதி 4:1)
   கன்னிகையின் மூலம் இயேசுவின் பிறப்பு (ஏசா. 7:14) (மத். 1:18-25)
4. II இராஜா. 19ஆம் அதிகாரம், ஏசாயா 37ஆம் அதிகாரம்
5. மூன்று முறை (II நாளா. 20:7, ஏசா.41:8, யாக். 2:23)
6. நியாயாதிபதிகள் 9: 8-15
7. மூன்று முறை (கலா. 4:6, மாற்கு 14:36, ரோமர் 8:15)
8. திஸ்பியனாகிய எலியா (Iஇராஜா. 17:1)
   எரோகாமின் குமாரன் (1 நாளா. 8:27)
   ஆர்மின் புத்திரன் (எஸ்றா 10:21)
   ஏலாமின் புத்திரன் (எஸ்றா 10: 26)
9. சங்கீதம் 100, 125, 93, 70, 43, 15
10. இயேசு கிறிஸ்து (மத்தேயு 1:1)
    கள்ள கிறிஸ்து (மத்தேயு 24:24)
    அந்திக் கிறிஸ்து (1 யோவான் 2:22)

## ஜூலை & ஆகஸ்டு மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Abisha Grace Rejin
2. Mrs. Ajita Ebi
3. Mr.Emmanuel
4. Mrs. Esther Pauline Rani
5. Mrs. Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Grace shekar
8. Mrs.Kishi Maher
9. Mrs. Jenila Gannraj.L
10. Mrs.Jasmine Sobha
11. Mr. Jeba Jino
12. Mrs.Manuel Sarah
13. Mr.Salin Robert
14. Mrs.Sheeba Merlin
15. Mrs.Sheeba Herlin
16. Mrs. Subija Jino
17. Mrs . Sharmila Rajesh
18. Mrs .Priya Ranjith Kumar
19. Mr. Prawin Durai Sam
20. Mrs.Blessy Lipny
21. Mrs.Helen Sharmila Ray
22. Mrs.Praveena Arun
23. Mrs.Nandhini Rajkumar
24. Mrs.Desigta Jaison
25. Mrs.Subi Kishore

## Children who answered July & August – 2024 Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Camryn Robert.S
4. Clement Dave
5. Evelyn Loria V
6. Galvin Robert.S
7. Gabrilyn Hannah
8. Giana Elin
9. Jevlyn Ana
10. Johan Sam Manuel
11. Joha Anit Manuel
12. Jeya Jehosheba Maher
13. Jeya Joshua Maher
14. Jen Scudd
15. Jim Scott
16. Johanan Paul Jino
17. Joanna Paul Jino
18. Jaylan paul Jino
19. Jebasheba .M
20. Jerilyn Pushpam Nelson
21. Leona Juliet
22. Hadriel Adventier
23. Yedidiah Arun (Ruwais)
24. Jaylan paul Jino
25. Evelyn Loria V
26. Daniel Vanya (RUWAIS)
27. Yovaan jairus (Ruwais)
28. Jaslin shanna
29. Jarick Aaron
30. Danion Lemuel
31. Rivqah Deby Rajkumar
32. Aaran
33. Joel Abrakam
34. P.S.Kev Shannen

# கோதுமை மணி



## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்

***இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி***

***14-06-1912 – 20-01-1997***

**ஈடித்தின் இறுதி நாட்கள்**

மின்ன சோட்டாவில் 1988-ல் உலக சுவிசேஷ ஊழியத்தின் 45-வது வருட விழா. ஆரம்பநாட்களில் இந்த இயக்கத்தில் பட்டாம்பூச்சியாய்ப் பறந்து திரிந்து ஜெபக் குழுக்களை உருவாக்கின நாட்களை நினைத்தவராக, விழாவில் பங்கேற்றார். இந்தியாவிலோ ஈடித்தின் பெரேயா தனது சொந்தக் கட்டித்தில் பத்து ஆண்டுகளை முடித்திருந்தது. அமெரிக்காவில் ஊழியம் கொடிகட்டிப் பிறந்தது. அந்த வயோதிய வயதில் மெதடிஸ்ட் சபை மூலம் காது கேளாதோருக்காக ஒரு மாபெரும் முகாமை ஒருங்கிணைந்து நடத்திவிட்டார். நூறுபேருக்கு மேல் பங்கேற்றனர்.

வயோதிகத்தின் சாயல் தென்பட ஆரம்பித்தபோதும், உடைந்த இடது மணிக்கட்டில் மாவுக் கட்டோடு கென்டீக்கி ஊழிய முகாமிற்குச் சென்றார் ஈடித். இவ்விதம் மிகத் தீவிரமாக செயலாற்றி வந்த ஈடித்தை பாக்கித்தாய், பிரேமா, பத்மினி, பி. சாமுவேல் மற்றும் அவரது பிள்ளைகளான ரிச்சர்ட், லெவனா சலோமி ஆகியோர் ஒவ்வொருவராக அமெரிக்காவில் சென்று பார்த்தனர். பாக்கித்தாயின் பயணத்தில் பல கூட்டங்களில் நெல்லை VBS-ஐ பற்றிப் பகிர்ந்தார். பிரேமா சென்றபோது தவங்கிய நிலையிலிருந்த ஈடித், VBS வரலாற்றையும் தன் சாட்சியையுமே சொல்வதில் அதிகம் அக்கறை காட்டினார். பத்மினியின் பயணத்தின்போது ஏதோ ஊருக்குப் புறப்பட்டிருப்பதுபோல் வீட்டில் மிகக் குறைந்த சாமான்களை மட்டும் வைத்துக்கொண்டு தன் விண்வீடு செல்ல ஆயத்தமாயிருந்தார்.

படிப்படியாக பெலவீனமடைந்த ஈடித் பெர்ல் மார்கன் 1997 ஜனவரி 20-நாள் தன் நித்திய வீட்டை அடைந்தார். அவரது பொன்னக பயணத்திற்கு முன் தொலைபேசியின் மறுமுனையில் தொண்டை அடைத்து நின்ற

பாக்கித்தாயைக் கவனித்துக் கொள்ளுமாறு தனது பிள்ளைகளான ஜேசன் தர்மராஜுக்கும், லீதியாளுக்கும், பேரப் பிள்ளையான லெவனா சலோமிக்கும் சொல்லியுள்ளார். பத்திரிக்கையில் அவரது அடக்க ஆராதனை ஒழுங்குகளை வெளியிடும் போது 'மலர்க் குவியலுக்குப் பதில் மெமோரியல்கள் செய்து, பால்ட் கிரீக் ஆலயத்தில் கொடுக்கவும், அதன் தொகை VBS ஊழியத்திற்காக பாளையங்கோட்டைக்கு அனுப்பப்படும்' என்ற செய்தியும் வெளியிடப்பட்டிருந்தது. மண்ணில் அடங்கும் வேளையிலும் விண்ணில் ஏறும் மனம் உன்னதர் பணியையே எட்டிப்பார்த்தது.

**VBS-ன் வளர்ச்சி**

இந்திய மண்ணின் தென் பகுதியிலுள்ள கோவில்பட்டியில் 1952-ல் VBS இரு அமெரிக்கப் பெண்மணிகளால் அறிமுகப்படுத்தப்பட்டாலும் இந்த அறிமுகத்திற்குக் காரணமான இந்திய SIBI மாணவர் சின்ன அண்ணாச்சி பி.சாமுவேல் VBS-ன் வளர்ச்சியில் அக்கறையுடன் இருந்தார். ஈடித் அம்மையார் தனது VBS பணியை நெல்லைப் பகுதியிலே பலப்படுத்தியிருந்தார். ஹாமில்டன் அம்மையார் தன் மாணவர், சக ஊழியர் உதவியுடன் VBS ஊழியத்தை தேசம் முழுவதிலும் எடுத்துச் செல்வதில் முன்னேற்றம் கண்டார். ஈடித் அம்மையாருக்கும், திருமதி. ஹேமில்டன் அம்மையாருக்கும் சின்ன அண்ணாச்சி பி.சாமுவேல் மிகவும் அரும்பெரும் உதவியாய் இருந்தார். இந்திய மண்ணில் இம்மூவரின் அர்ப்பணிப்பாலும், இவர்களோடிணைந்த நண்பர்களின் ஈடுபாட்டாலும், கர்த்தரின் தயவால் VBS என்ற சிறுவர் ஊழியம் ஓங்கி வளர ஆரம்பித்தது.

ஒரு சில வருடங்கள் சகோதரி ஈடித்தும் திருமதி ஹாமில்டன் அம்மையாரும் வளர்ந்து வந்த இருபகுதி VBS-ற்கான கருத்தைத் தங்கள் தேசத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட கருத்தோடு இசைந்த கருத்தாகப் பயன்படுத்தினர். 1961-ம் ஆண்டிற்குப்பின் இந்திய மண்ணிற்கேற்ற கருத்துக்களைத் தெரிந்தெடுத்தனர். பின்னர் பங்காரபெட் VBS என்ற பெயர்பெற்ற SIBI-ஐ சார்ந்த VBS-ம் நெல்லையிலுள்ள VBS-ம் தங்கள் கருத்துக்களைத் தாங்களாகவே நிர்ணயித்தனர். இரண்டு VBS ஊழியமும் ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதோடு நில்லாமல் VBS TEAM அங்கத்தினர் பரிமாற்றம் இதர உதவிகளோடு சார்ந்திருக்கும் சுதந்திரத்தோடு வளமான கனிகொடுத்தன.

1955-ம் ஆண்டு மதுரைப் பகுதியின் VBS தேவை அதிகரிக்கவே, தன்னோடு பிற பகுதிகளுக்குச் செல்லத் தகுந்த இளைஞர்களை அனுப்புமாறு பி.சாமுவேல் இந்திய நற்செய்தி மாணவர் மன்றத்தின் (UESI) தலைவர் ஸ்டெரட்டிடம் கேட்டுக்கொண்டார். அவர் திரு. சாம் கமலேசன், திரு. தியோடர் வில்லியம்ஸ், திரு. மோசஸ் ஜோசப், ஃபிரெடி கொக்காவி உட்பட சிலரை ஊக்குவித்து அனுப்பினார். இவர்களோடு மதுரையில் உள்ள திரு.போத்திராஜுலு, திரு. போஸ் மெய்யப்பன், திரு. கிறிஸ்துதாஸ், திரு. செல்வராஜ் பென், செல்வி. ரூபி அழகு மாணிக்கம் போன்றோர் இணையவே அங்கும் VBS விமரிசையாக நடந்தது. அப்போதைய மதுரைத் திருமண்டல அத்தியட்சர் நியுபிகின் அவர்கள் இதற்கு மிகவும் ஆதரவு தந்தார்.

- தொடரும்

## பாடல் பிறந்த கதை



### கர்த்தர்தாம் எங்கள் துர்க்கமும் [பாமாலை 206 ]

### (A safe stronghold our God is still)

கர்த்தர்தாம் எங்கள் துர்க்கமும்
அரண் பலமுமாமே;
உண்டாம் இக்கட்டனைத்தையும்
போக்குவார் அவர்தாமே
பொல்லாங்கனின் சினம்
இப்போது மா விஷம்
துஷ்டமும் சூதையும்
அணிந்து உறும் –
நிகர் புவியில் இல்லை.

***‘‘கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகருமானவர்’ 2 சாமு 22 : 2.***

மார்ட்டின் லூதர் (Martin Luther) என்னும் சீர்திருத்தவாதி பதினாறாம் நூற்றாண்டில் என்றும் அழியாத ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார். அக்காலத்தில் பாப்பரசர் தலைமையில் செயல்பட்டுவந்த ரோமச்சபையின் ஒழுங்கீனங்களையும், திருமறையின் போதனைக்கு மாறாக ஏற்பட்டிருந்த பழக்கவழக்கங்களையும் லூதர் பலமாகக் கண்டித்ததால், அவரைப் பிடித்துக்கொலை செய்ய ரோமச் சபைத் தலைவர்கள் திட்டமிட்டு, அவரைப் பல நீதிமன்றங்களுக்கு அழைத்து, அவரது கொள்கைகளை விட்டு விடும்படி வற்புறுத்தினர். ஆனால் லூதர் மறுத்து விட்டார். கடைசியில் ஸ்பயர்ஸ் என்னுமிடத்தில், லூதரின் கொள்கைகளை ஆதரித்த பல ஜெர்மனி நாட்டு சிற்றரசர்கள் கூடி ரோமச் சபையின் தவறான கொள்கைகளை எதிர்த்து ஒரு பிரகடனம் (Protest of Spires) வகுத்தனர். இதனால் ஜெர்மன் மக்களிடையே ஏற்பட்ட மதப் பிரிவுகளைச் சக்கரவர்த்தியான ஐந்தாம் சார்ல்ஸ் ஒரு நீதிமன்றத்தைக் கூட்டி, லூதரை ஆதரித்த ஜெர்மன் சிற்றரசர்களை அழைத்தார். லூதர் இம்மன்றத்துகு அனுமதிக்கப் படவில்லை. ஆனால் மன்றத்துக்குச் சென்ற பிரபுக்களுடன் பாதிவழி சென்று, அவர்களை உற்சாகப்படுத்துவதற்காக, பிரயாணத்தின் போதே, ‘கர்த்தர்தாம் எங்கள் துர்க்கமும்’ என்ற பாடலை எழுதி, அதற்கேற்ற ராகத்தையும் அமைத்துப் பாடினார். மிகவும் ஆபத்தான அந் நிலையிலிருந்த அவரது நண்பர்களுக்கு இப்பாடல் மிகுந்த தைரியத்தையும், மன உறுதியையும் அளித்தது. இப்பாடலை நாம் வாசிக்கும் போது, அவர் எத்தகைய ஆபத்துகளுக்கு உட்பட்டிருந்தார் என்பதையும், கடவுளின் பாதுகாப்பை எவ்வளவாக நம்பியிருந்தார் என்பதையும் காண்போம்.

மார்ட்டின் லூதர் ஜெர்மனி நாட்டில் எய்லிபென் (Eisleben) நகரத்தில் 1483 - ம் ஆண்டு, நவம்பர் மாதம், 10ம் தேதி, பரி. மார்ட்டின் திருநாளன்று பிறந்தார். அவரது தந்தை ஒரு எளிய சுரங்கத் தொழிலாளி. மகன் ஒரு வழக்கறிஞராக வேண்டுமென்று தந்தை ஆவல் கொண்டாலும், கடவுள் ஊழியத்திற்கென்றே தம்மைத் தத்தம் செய்தார்.அவர் எர்பர்ட் பல்கலைக்கழகத்தில் படித்து (University of Erfurt), 1505’ல் எம்.ஏ. பட்டம் பெற்றார். பின் அந்நகரிலுள்ள ஒரு துறவி மடத்தில் சேர்ந்து, 1507ல் குருவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். மறு ஆண்டில் விற்றன்பர்க் பல்கலைக்கழகத்துக்கு (University of Wittenberg) மாற்றப்பட்டு, பேராசிரியராகப் பணியாற்றினார். அங்குள்ள நூலகத்தில் ஒரு லத்தீன் வேதபுத்தகத்தைக்

கண்டு, அதை வாசிக்கும்போது, ரோமச் சபையின் சித்தாந்தங்கள் திருமறையின் போதனைகளுக்கு முற்றிலும் மாறாக இருப்பதைக் கண்டு வியப்புற்றார். ஒருமுறை அவர் ரோம் நகருக்குச் செல்ல நேர்ந்தது. அங்குள்ள துறவிகளும் மதத்தலைவர்களும் நடத்திய வாழ்க்கையைக் கண்டு, ரோம் நகரமே நரகத்தின் மையம் என்னும் எண்ணத்தோடு விற்றன்பர்க் திரும்பினார்.

இக்காலத்தில்தான் ரோம் நகரில் பரி. பேதுரு பேராலயம் கட்டத் திரளான பணம் தேவைப்பட்டது. இதற்காகப் பாப்பரசர் உத்தரவுப்படி ஏராளமான பாவமன்னிப்புச் சீட்டுகள் (Indulgences) தயாரிக்கப்பட்டுப் பல இடங்களிலும் விற்பனை செய்யப்பட்டன. லூதர் இதை பலமாக கண்டித்து, விற்றன்பர்க் ஆலயத்தின் கதவில் 95 குற்றச்சாட்டுகள் அடங்கிய ஒரு காகிதத்தை ஒட்டிவைத்தார். அப்போது, அங்கு ஒரு பண்டிகைக் காலமாயிருந்ததால், ஏராளமானபேர் அதைப் படித்து, அதின் உண்மையை ஒத்துக்கொண்டனர். இது பாப்பரசர் கவனத்துக்கு வரவே, லூதர் ஆஸ்பர்க் நகரத்துக்கு வரவழைக்கப்பட்டு, பாப்பரசரின் பிரதிநிதியால் விசாரணை செய்யப்பட்டார். இவ்விசாரணையில் அவரது கொள்கைகளைக் குறித்துப் பேசவிடாமல், அவற்றைக் கைவிடுமாறு வற்புறுத்தப் பட்டது. ஆனால் லூதர் தன் கொள்கைகளை திருமறையின் ஆதாரமாகக் கொண்டதால் அவற்றைக் கைவிட மறுத்துவிட்டார். அன்றிரவே அவரது நண்பர்கள் அவரை இரகசியமாக விற்றன்பர்குக்கு அனுப்பிவிட்டனர். இதைக் கேட்ட பாப்பரசர் அவரைச் சபைக்குப் புறம்பாக்கினார்.

லூதரின் சீர்திருத்தக் கொள்கைகளை ஒழித்துக் கட்டுவதற்காக, ஜெர்மன் சக்கரவர்த்தியான சார்ல்ஸ் என்பவர் வெர்ம்ஸ் நகரில் ஒரு நீதிமன்றத்தைக் கூட்டினார். இதிலும் அவர் தன் கொள்கைகளைக் கைவிட இயலாது என உறுதியாகக் கூறினார். ஜெர்மனியிலுள்ள பல சிற்றரசர்களும், பிரபுக்களும் அவரை ஆதரித்ததால், யாதொரு ஆபத்துமின்றி லூதர் விற்றன்பர்க் திரும்பினார். ஆயினும், லூதர் இன்னமும் மிகுந்த ஆபத்தில் இருந்ததால், அவரது நண்பர்கள் அவரை வார்ட்பர்க் என்னும் மலைக்கோட்டையில் (Wartburg Castle) ரகசியமாக ஒளித்து வைத்தனர். இதையறியாத ரோமச் சபையினர், லூதர் இறந்தார் என மகிழ்ச்சியடைந்தனர். கோட்டையினுள்ளிருந்து அவர் புதிய ஏற்பாட்டை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். ஓராண்டுக்குப் பின் அவர் வெளிவந்து தமது ஊழியத்தைத் தொடர்ந்தார்.

1529ல் சார்ல்ஸ் மன்னர் ஜெர்மனியில் லூதரை ஆதரித்த பிரபுக்களை ஸ்பயர்ஸ் என்னுமிடத்தில் ஒரு நீதிமன்றத்துக்கு அழைத்தார். இதில் அவர்கள் சீர்திருத்தக் கொள்கைகளை ஆதரித்து ஒரு பிரகடனம் வகுத்தனர். இப்பிரகடனம், 'Protest of Spires' என்றும், அதை ஆதரித்தவர்கள், 'Protestants' என்றும் அழைக்கப் பட்டனர். இதற்குப்பின் சீர்திருத்தக் கொள்கைகள் காட்டுத் தீ போல் உலகம் எங்கும் பரவி, சீர்திருத்தச் சபைகள் உருவாகின.

மார்ட்டின் லூதர் ஆரம்பத்தில் ரோமச் சபையின் ஒழுங்கீனங்களைச் சுட்டிக்காட்டும் போது, அச்சபையை விட்டுப் பிரியும் நோக்கமே கிடையாது. ஆனால் அச்சபையினரின் பிடிவாதமான போக்கினால் சீர்திருத்தச் சபை உண்டாயிற்று. அவரது கால வாழ்க்கை, திருமறையை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பதிலும், பாடல்கள், ராகங்கள் எழுதுவதிலும் செலவிடப் பட்டது. அவர் ஒரு சிறந்த சங்கீத நிபுணர்.மார்ட்டின் லூதர் எய்லிபென் நகரத்தில், 1546ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 18ம் தேதி மறுமைக்குட்பட்டார்.



# ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – செப்டம்பர் 2024

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | ஞாயிறு | 11.00pm – 1.00 pm | உபவாச ஜெபம் – *Cocoa Lounge, ADCP Tower, 17th Floor, Electra* |
| | | 2.00 pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - *Cocoa Lounge, ADCP Tower, 17th Floor, Electra* |
| 3 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 6 | வெள்ளி | 7.00 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 8 | ஞாயிறு | 5.30 pm – 6.30pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா |
| 10 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 13 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 15 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் |
| 17 | செவ்வாய் | 7.00 pm – 8.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி |
| 20 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 24 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 27 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 30 | திங்கள் | 11.45 pm – 12.00 அm | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# BIBLE READING FOR CHILDREN – SEPTEMBER 2024

| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.09.24 | II Corinthians | 2 : 1 - 5 |
| 2.09.24 | II Corinthians | 2 : 6 - 11 |
| 3.09.24 | II Corinthians | 2 : 12 - 17 |
| 4.09.24 | II Corinthians | 3 : 1 - 5 |
| 5.09.24 | II Corinthians | 3 : 6 - 10 |
| 6.09.24 | II Corinthians | 3 : 11 - 18 |
| 7.09.24 | II Corinthians | 4 : 1 - 5 |
| 8.09.24 | II Corinthians | 4 : 6 - 12 |
| 9.09.24 | II Corinthians | 4 : 13 - 18 |
| 10.09.24 | II Corinthians | 5 : 1 - 6 |
| 11.09.24 | II Corinthians | 5 : 7 - 14 |
| 12.09.24 | II Corinthians | 5 : 15 - 21 |
| 13.09.24 | II Corinthians | 6 : 1 - 7 |
| 14.09.24 | II Corinthians | 6 : 8 - 12 |
| 15.09.24 | II Corinthians | 6 : 13 - 18 |
| 16.09.24 | II Corinthians | 7 : 1 - 5 |
| 17.09.24 | II Corinthians | 7 : 6 - 10 |
| 18.09.24 | II Corinthians | 7 : 11 - 16 |
| 19.09.24 | II Corinthians | 8 : 1 - 5 |
| 20.09.24 | II Corinthians | 8 : 6 - 10 |
| 21.09.24 | II Corinthians | 8 : 11 - 15 |
| 22.09.24 | II Corinthians | 8 : 16 - 19 |
| 23.09.24 | II Corinthians | 8 : 20 - 24 |
| 24.09.24 | II Corinthians | 9 : 1 - 5 |
| 25.09.24 | II Corinthians | 9 : 6 - 10 |
| 26.09.24 | II Corinthians | 9 : 11 - 15 |
| 27.09.24 | II Corinthians | 10 : 1 - 5 |
| 28.09.24 | II Corinthians | 10 : 6 - 11 |
| 29.09.24 | II Corinthians | 10 : 12 - 18 |
| 30.09.24 | II Corinthians | 11 : 1 - 5 |

## தினசரி வேத வாசிப்பு பகுதிகள் – செப்டம்பர் 2024




| தேதி | நாள் | காலை | | மாலை | |
|---|---|---|---|---|---|
| 1 | ஞாயிறு | 2 இராஜாக்கள் | 13 : 1 - 14 | மாற்கு | 11 : 1 - 17 |
| 2 | திங்கள் | 2 இராஜாக்கள் | 13 : 15 - 25 | மாற்கு | 11 : 18 - 33 |
| 3 | செவ்வாய் | 2 இராஜாக்கள் | 14 : 1 - 14 | மாற்கு | 12 : 1 - 15 |
| 4 | புதன் | 2 இராஜாக்கள் | 14 : 15- 29 | மாற்கு | 12 : 16 - 31 |
| 5 | வியாழன் | 2 இராஜாக்கள் | 15 : 1 - 13 | மாற்கு | 12 : 32 - 44 |
| 6 | வெள்ளி | 2 இராஜாக்கள் | 15 : 14- 26 | மாற்கு | 13 : 1 - 18 |
| 7 | சனி | 2 இராஜாக்கள் | 15 : 27 - 38 | மாற்கு | 13 : 19 - 37 |
| 8 | ஞாயிறு | 2 இராஜாக்கள் | 16 : 1 - 20 | மாற்கு | 14 : 1 - 18 |
| 9 | திங்கள் | 2 இராஜாக்கள் | 17 : 1 - 12 | மாற்கு | 14 : 19 - 30 |
| 10 | செவ்வாய் | 2 இராஜாக்கள் | 17 : 1 3- 28 | மாற்கு | 14 : 31 - 58 |
| 11 | புதன் | 2 இராஜாக்கள் | 17 : 29 - 41 | மாற்கு | 14 : 59 - 72 |
| 12 | வியாழன் | 2 இராஜாக்கள் | 18 : 1 - 15 | மாற்கு | 15 : 1 - 15 |
| 13 | வெள்ளி | 2 இராஜாக்கள் | 18 : 16 - 26 | மாற்கு | 15 : 16 - 30 |
| 14 | சனி | 2 இராஜாக்கள் | 18 : 27- 37 | மாற்கு | 15 : 31 - 47 |
| 15 | ஞாயிறு | 2 இராஜாக்கள் | 19 : 1 - 19 | மாற்கு | 16 : 1 - 20 |
| 16 | திங்கள் | 2 இராஜாக்கள் | 19 : 20 - 37 | லூக்கா | 1 : 1 - 17 |
| 17 | செவ்வாய் | 2 இராஜாக்கள் | 20 : 1 - 10 | லூக்கா | 1 : 18 - 33 |
| 18 | புதன் | 2 இராஜாக்கள் | 20 : 11 - 21 | லூக்கா | 1 : 34 - 50 |
| 19 | வியாழன் | 2 இராஜாக்கள் | 21 : 1 - 26 | லூக்கா | 1 : 51 - 64 |
| 20 | வெள்ளி | 2 இராஜாக்கள் | 22 : 1 - 20 | லூக்கா | 1 : 65 - 80 |
| 21 | சனி | 2 இராஜாக்கள் | 23 : 1 - 17 | லூக்கா | 2 : 1 - 17 |
| 22 | ஞாயிறு | 2 இராஜாக்கள் | 23 : 18 - 37 | லூக்கா | 2 : 18 - 35 |
| 23 | திங்கள் | 2 இராஜாக்கள் | 24 : 1 - 20 | லூக்கா | 2 : 36 - 52 |
| 24 | செவ்வாய் | 2 இராஜாக்கள் | 25 : 1 - 15 | லூக்கா | 3 : 1 - 14 |
| 25 | புதன் | 2 இராஜாக்கள் | 25 : 16 - 30 | லூக்கா | 3 : 15 - 38 |
| 26 | வியாழன் | 2 நாளாகமம் | 1 : 1 - 34 | லூக்கா | 4 : 1 - 15 |
| 27 | வெள்ளி | 2 நாளாகமம் | 1 : 35 - 54 | லூக்கா | 4 : 16 - 32 |
| 28 | சனி | 2 நாளாகமம் | 2 : 1 - 17 | லூக்கா | 4 : 33 - 44 |
| 29 | ஞாயிறு | 2 நாளாகமம் | 2 : 18 - 30 | லூக்கா | 5 : 1 - 16 |
| 30 | திங்கள் | 2 நாளாகமம் | 2 : 31 - 55 | லூக்கா | 5 : 17 - 39 |

# ஆராதனை பாடல்கள் – செப்டம்பர் 2024



| | |
|---|---|
| **06-09-24** | |
| பாமாலை - 320 | என் முன்னே மேய்ப்பர் போகிறார் |
| பாமாலை – 324 | பாதை காட்டும் மா யெகோவா |
| கீர்த்தனை - 271 | தந்தேன் என்னை இயேசுவே |
| கீர்த்தனை - 317 | அனுக்கிரக வார்த்தையோடே |
| **13-09-24** | |
| பாமாலை - 2 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை - 367 | ஆண்டவா பிரசன்னமாகி |
| கீர்த்தனை – 303 | எந்நாளுமே துதிப்பாய் |
| மங்கள கவிகள் – 2 | கர்த்தர் தந்த ஈவுக்காக |
| **20-09-24** | |
| பாமாலை - 1 | பகலோன் கதிர் போலுமே |
| பாமாலை - 322 | கர்த்தாவை நல்ல பக்தியாலே |
| கீர்த்தனை – 108 | விசுவாசியின் காதில் பட |
| பாமாலை – 36 (1&2) | என்னோடிரும் மா நேச கர்த்தரே |
| **27-09-24** | |
| பாமாலை – 14 | ஆத்மமே உன் ஆண்டவரின் |
| பாமாலை - 258 | இயேசுவே உம்மைத் தியானித்தால் |
| கீர்த்தனை – 83 | இயேசுவின் நாமமே திருநாமம் |
| பாமாலை – 261 (1&2) | எல்லாருக்கும் மா உன்னதர் |

## திருமறை பாட ஒழுங்குகள் – செப்டம்பர் 2024

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 06-09-24 | இயேசுவே குரு | நீதி. 4:1 - 19 | அப். 22:1-5 | லூக்கா 4:31-44 | 111 |
| 13-09-24 | கிறிஸ்துவின் சமாதானம் | சகரியா 8:12-19 | ரோமர் 5:1-5 | யோவான் 16:16-33 | 119: 161-176 |
| 20-09-24 | எளியோரும் திருச்சபையும் | ஆமோஸ் 8:4-7 | யாக்கோபு 2:1-7 | லூக்கா 16:19-31 | - |
| 27-09-24 | வழிபாட்டில் ஒருமைப்பாடு | நெகே. 2:17-20 | ரோமர் 8:31-39 | லூக்கா 9:1-16 | 66 |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 03-09-24 | சங்கீதம் | 138 | Hamdan |
| 10-09-24 | சங்கீதம் | 139 | Muroor |
| 17-09-24 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 24-09-24 | சங்கீதம் | 140 | Mussafah |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



## BIRTHDAY - SEPTEMBER




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 2 | Mrs. | Kishi Frene Mahear |
| 2 | Mr. | Arul Sugirson Samuel. K |
| 2 | Ms. | Nancy Prescilla. N |
| 2 | Ms. | Nissy Lydia. N |
| 2 | Mrs. | Jenita Miracle |
| 2 | Mrs. | Tamizhamudhini |
| 3 | Mrs. | Persis Rani |
| 4 | Ms. | Emilyn Cynthia |
| 5 | Master. | Jim Scott |
| 5 | Master | Aaran Stefin |
| 6 | Mrs. | Helen Hema Geetha |
| 6 | Ms. | Steffi Priscilla |
| 6 | Mrs. | Christle Preethi Ansel |
| 7 | Mrs. | Rathibai Dennison |
| 7 | Mrs. | Elizabeth Juliet |
| 10 | Mr. | Jeya Mahear |
| 10 | Miss. | Nilani |
| 11 | Baby. | Pristina Samlyn |
| 11 | Mr. | Madhan Kumar K |
| 12 | Mrs. | Tania Cecil |
| 14 | Mrs. | Maria Elizabeth Samuel |
| 14 | Master. | Jared Isaac Johnson |
| 15 | Ms. | Nijolin. J |
| 15 | Mrs. | Silvia Annie |
| 15 | Mr. | Nigel Guna Sekar |
| 15 | Ms | Persis Seljah Manoharan |

# BIRTHDAY - SEPTEMBER




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 15 | Baby | Thea Harel |
| 16 | Mr. | John Michael Franklin E. |
| 17 | Mr. | Julious Agastian |
| 19 | Mr. | Arnold A |
| 19 | Mrs. | Petricia |
| 20 | Ms. | Sherlin Jerusha Getziyal. J |
| 20 | Mr. | Evanjin Vetha Raja |
| 20 | Baby. | Ryan Paul Samuel |
| 20 | Ms. | Caroline Danial Abraham |
| 20 | Baby | Danica |
| 21 | Mrs. | Sheeba Daniel |
| 21 | Mrs. | Geetha Leslie |
| 21 | Mr. | Felix Mathew |
| 22 | Mrs. | D. R. Ajita Steffia Liz |
| 22 | Mr. | Joe Vivek David |
| 23 | Ms. | Edrina. R |
| 24 | Master. | Jonas Brendan. J |
| 24 | Mrs. | Baulin Jinilet |
| 25 | Ms. | Anita Josceline |
| 26 | Mrs. | Hema Alphonsa |
| 26 | Ms. | Giftlin Jeyamalar |
| 27 | Master. | Jaren Joshua |
| 28 | Mr. | Anti Grapeson D |
| 29 | Mrs. | Adlin Cherisha D J |
| 29 | Master | Oliver Franklin |
| 30 | Mr. | Arul Mozhi Varman |
| 30 | Ms. | Angelin Mizpah |
| 30 | Mrs. | Beena Kumari. R |
| 30 | Mr. | Stephenson |




## WEDDING ANNIVERSARY – SEPTEMBER

| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. & Mrs. | Davidraja Manimaran |
| 2 | Mr. & Mrs. | Jeya Seelan Gabriel |
| 2 | Mr. & Mrs. | Julian John |
| 2 | Mr. & Mrs. | Emmanuel Vanya. J.P |
| 2 | Mr. & Mrs. | Prince Trison |
| 3 | Rev. & Mrs. | Samuel John Dinakaran |
| 5 | Mr. & Mrs. | Rejin Raj Manuel. R |
| 7 | Mr. & Mrs. | Ranjith Kumar. J |
| 8 | Mr. & Mrs. | T. Franklin |
| 9 | Mr. & Mrs. | S. Ebi Tenniyson |
| 10 | Mr. & Mrs. | Elengovan Irwin |
| 10 | Mr. & Mrs. | Leslie Manohar Isaac. W |
| 11 | Mr. & Mrs. | Santhosamani |
| 25 | Mr. & Mrs. | Immanuel Stanly |
| 26 | Mr. & Mrs. | Samuel Jackson Rajan |
| 29 | Mr. & Mrs. | Sujil |
| 30 | Mr. & Mrs. | Joslin Ananth N. |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Mr. Srinivasan Jayaprakasam | 482 |
| 2 | Mr. Sunil Jaymurthy | 483 |
| 3 | Mr. Joslin Ananth N | 484 |
| 4 | Mr. Jo Ernast D | 485 |
| 5 | Mr. John Michael Franklin E | 486 |
| 6 | Bamish P | 487 |
| 7 | Sundar Jebakumar T | 488 |
| 8 | Shibu Kumar | 489 |
| 9 | Daniel Abraham | 490 |

## Proverbs 19:17 KJV

He that hath pity upon the poor lendeth unto the Lord; and that which he hath given will he pay him again.